# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று நிதிக்கூற்றுக்களில் தனியானதோர் கூறாகும். எவ்வாறாயினும், இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 03 இல் வேண்டப்பட்டவாறு இக்கூற்று ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. மேலும், இது தொடர்பில் எனது முன்னைய ஆண்டிற்கான அறிக்கையினாலும் ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 9 இன் பிரகாரம் நிதியீட்ட மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் தெளிவாக இனங்காணப்பட்டு வெவ்வேறாக காசுப்பய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், இந்தச் செயற்பாடுகளிலிருந்தான ரூபா 33,002,372,764 மொத்தமான காசுப்பாய்ச்சலை வெவ்வேறாகக் காண்பிப்பதற்குப் பதிலாக முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) ரூபா 23,403,160 ஆன பணிக்கொடைக்கான ஏற்பாடு மற்றும் அதன் மீது மேற்கொள்ளப்பட்ட ரூபா 21,533,040 ஆன முதலீடுகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 16 இற்கு

இணங்க கணக்குகளில் ஓய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பணிக்கொடைப் பொறுப்பு தொடர்பான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் படி வட்டி வருமானம் மற்றும் பங்குலாபங்கள் தவிர்ந்த ஆணைக்குழுவின் ஏனைய வருமானங்கள் வருமான வரியிலிருந்து விலக்களிப்பச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 24 இன் பிரகாரம் அது நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

(அ) வங்கிக் கணக்கிற்கு நேரடியாகப் பெறப்பட்ட ரூபா 11,704,355 தொகையான மீளாய்வாண்டிற்கான தொலைத்தொடர்பு தீர்வை மற்றும் பெறவேண்டிய ரூபா 31,405,442 தொகையான சர்வதேச வெளிச்செல்லல் அழைப்புத் தீர்வை என்பன கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்ததன் காரணமாக ஆண்டிற்கான வருமானம் ரூபா 43,109,797 ஆல் குறைத்துக் காட்டப்பட்ட அதேநேரம் மீளாய்வாண்டிற்கான காசும் காசிற்கு சமமான விடயங்கள் மற்றும் பெறவெண்டிய கணக்குகள் என்பனவும் முறையே ரூபா 11,704,355 மற்றும் ரூபா 31,405,442 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) கணக்குகளில் காட்டப்பட்டுள்ள கட்டிடங்களின் கிரயம் தவறாக ரூபா 3,292,300 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. அதன் விளைவாக கட்டிடங்கள் மீதான பெறுமானத்தேய்வும் ரூபா 164,615 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) வட்டி வருமானத்தினைக் கணிப்பிடுகையில் சில சந்தர்ப்பங்களில் வட்டி வருமானத்தின் மீதான நிறுத்தி வைத்தல் வரியும் தவறுதலாக அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக வட்டி வருமானம் மற்றும் செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி என்பன ரூபா 185,508 ஆல் குறைத்துக் காட்டப்பட்டன.

(ஈ) தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப ஒழுங்குபடுத்தும் இயலளவை கட்டியெழுப்புதல் (ஐசீரீ-ஆர்சீபீபீ) செயற்திட்டத்திற்குரிய ரூபா 3,223,683 செலவினம் மீளாய்வாண்டிற்கான ஆணைக்குழுவின் செலவினமாக கொள்ளப்பட்டிருந்தமையால் அத்தொகையால் செலவினம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய கணக்கு மீதிகள் ரூபா 1,948,138,756 ஆகும். அந்த மீதிகளில் 01 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட தொகை ரூபா 318,674,227 ஆனதுடன் இது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டன. அவற்றின் மீதான காலப்பகுப்பாய்வொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| 01 வருடத்திற்கு குறைந்தவை | 01 வருடத்திற்கு மேல் 02 ஆண்டுகளிற்கு குறைந்தவை | 02 ஆண்டுகளிற்கு மேற்பட்டவை | மொத்தம் |
|---|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 1,629,464,534 | 47,084,657 | 271,589,570 | 1,948,138,756 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன.

(i) பெறவேண்டிய கணக்கு மீதிகளில் ரூபா 1,759,562,017 அல்லது 90% பெறவேண்டிய வானொலி அலைவரிசைக் கட்டணத்தினை பிரதிநிதித்துவம் செய்திருந்ததுடன் அதில் ரூபா 105,727,791 இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்திடமிருந்து (எஸ்எல்பீசீ) அறவிடப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், எஸ்எல்பீசீ இன் கணக்குகளின் படி 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவிற்கு செலுத்தவேண்டியதாக எந்த மீதியும் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும், நீண்ட காலமாக நிலவிவரும் மீதிகளை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு எஸ்எல்பீசீ உடன் பொருத்தமான தொடர்புகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 02 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட தொகை ரூபா 271,577,267 எனக் காட்டப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியான நிலுவைக் காலம் 20 வருடங்களிற்கும் மேற்பட்டதாகும். அதன் காரணமாக இந்த மீதிகளின் அறவீடு ஐயத்திற்குரியதாகும். மேலும், நீண்டகாலமாக நிலுவையாகவிருக்கும் இக்கடன்பட்டோர்

மீதிகளை அறவிடுவதற்கு பயனுள்ள நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதிவேடுகளின் படி வானொலி அலைவரிசைக் கட்டண கடன்பட்டோர்களின் எண்ணிக்கை 917 ஆகும். ஏறத்தாழ 200 கடன்பட்டோர்களிற்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் 23 கடன்பட்டோர்களினால் அதற்குப் பதிலளிக்கப்பட்டிருந்தன. அத்துடன், ஆணைக்குழுவின் கணக்கப் புத்தகங்களின் படி, இரண்டு கடன்பட்டோர்களிடமிருந்து பெறவேண்டிய கூட்டுமொத்தத் தொகை ரூபா 168,812,935 ஆன போதிலும் அக் கடன்பட்டோர்களின் உறுதிப்படுத்தல் கடிதங்களில் அவை ரூபா 125,198,775 எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையால் ரூபா 43,614,160 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

## (ஆ) அறவிடப்படவேண்டிய பதவியிணர் கடன்கள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அறவிடப்படவேண்டிய பதவியிணர் கடன் மீதிகள் ரூபா 83,725,710 ஆனதுடன் கணக்காய்விற்குக் கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக நிலுவையாகவுள்ள தொகை ரூபா 2,420,222 ஆகும். விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கடன் மற்றும் முற்பணங்களின் வகை | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 01 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக வெளிநின்ற தொகை |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| இடர் கடன்கள் | 21,198,207 | 983,823 |
| பண்டிகை முற்பணங்கள் | 137,258 | - |
| மோட்டார் வாகன கடன்கள் | 55,428,682 | 1,294,405 |
| வீடமைப்புக் கடன்கள் | 5,700,209 | - |
| மோட்டார் சைக்கில் கடன்கள் | 1,261,354 | 141,994 |
| | 83,725,710 | 2,420,222 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பும் மேற்கொள்ளப்பட்டது.

2010 ஆம் ஆண்டில் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 474,275 தொகையான இடர் மற்றும் மோட்டர் வாகனக் கடனினை அறவிடுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) செலுத்தவேண்டிய கணக்குகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 3,255,142,565 ஆனதுடன் 01 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாதுள்ள தொகை ரூபா 312,059,587 ஆகும்.

(ii) 2003 முதல் 2008 வரையான காலப்பகுதியில் 05 நிறுவனங்களிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 307,635,000 முற்பணங்கள் தொடர்ச்சியாக நடைமுறைக் கணக்குகளின் கீழ் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் இவற்றைத் தீர்ப்பதற்கோ இல்லது ஆணைக்குழவின் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

---

உறுதிப்படுத்தல்கள், நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, கனணிகள் மற்றும் துணைச்சாதனங்களிற்கான பதிவேடு, கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள் மற்றும் செலுத்திய மற்றும் செயற்படுத்துனர்களினால் செலுத்தவேண்டிய தீர்வைகள் மீதான கட்டணங்களிற்கான மதிப்பீட்டு அறிக்கைகள் என்பன கிடைக்காமை காரணமாக ரூபா 30,043,711,925 கூட்டுமொத்தமான பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள், நிலையான சொத்துக்கள், பெறுமானத்தேய்வு, தொலைத்தொடர்பு தீர்வைகள் மற்றும் கட்டணங்கள் மற்றும் செஸ் வரி போன்றவற்றினை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்கி ஒழுகாமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| (i) 13 (8) ஆம் பிரிவு | 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை பணிப்பாளர் சபை பரிசோதித்து சமர்ப்பிக்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதத்திற்குள் அதில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் சபையினால் முன்னெடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்க வேண்டிய போதிலும் 2010 இன் அறிக்கை தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) II ஆம் பிரிவு மற்றும் 2000 யூன் 27 ஆந் திகதிய பீஎப்/பீஈ/09 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2011 ஜனவரி 27 ஆந் திகதிய பீஎப்டீ/56 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மிகையான காசினை முதலீடு செய்வதற்குத் தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டில் ரூபா 3,120,000,000 தொகையொன்று வங்கி நிலையான வைப்புக் கணக்கு மற்றும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 2002 மே 24 ஆந் திகதிய பீஎப்/பீஈ/21 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களிற்குள் வரைபு நிதிக்கூற்றுக்களை உள்ளடக்கிய வரைபு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் படி இணங்கி ஒழுகியிருக்கவில்லை. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் சம்பந்தமாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிவரப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) நிதிப்பிரமாணங்கள் (நி.பி.) | |
| (i) நி.பி. 371 (இ) | ஆணைக்குழுவானது உப கட்டுநிதிகளை வழங்குவதற்கு முன்னர் எதிர்பார்க்கும் செலவினத்தை நிச்சயிப்பதற்கு தவறியிருந்தது. அதன் விளைவாக செலுத்தப்பட்ட ரூபா 1,021,250 முற்பணத்தில் ரூபா 496,664 அல்லது 49% |

ஆனவை உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்திக் கொள்ளாது 3 தொடக்கம் 71 நாட்கள் காலதாமதத்தின் பின்னர் காசாக தீர்க்கப்பட்டிருந்தது.

(ii) நி.பி. 371 (2) (ஆ) — விதிக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய ரூபா 20,000 இனை மீறி வழங்கப்பட்டிருந்த 83 உப கட்டுநிதிகளின் மொத்தம் ரூபா 4,519,175 ஆகும்.

(iii) நி.பி. 757(2) — மீளாய்வாண்டிற்கான கணிப்பீட்டுச் சபையொன்றினை நியமித்து அதன் அறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு ஆணைக்குழு தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் ஆணைக்குழுச் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 29,350,461,445 மிகையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 5,378,271,498 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 23,972,189,947 அதிகரிப்புக் காட்டப்பட்டது.

ஆண்டிற்கான தொலைத்தொடர்புத் தீர்வைகளும் கட்டணங்களும் பிரமிக்கத்தக்க வகையில் ரூபா 23,836 மில்லியனால் அதிகரித்திருந்தமை மற்றும் அறவிடமுடியாத ஐயக்கடனிற்கான ஏற்பாடு ரூபா 138 மில்லியனால் குறைவடைந்திருந்தமையே மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பிரதான காரணங்களாக அமைந்திருந்தன.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு ஆணைக்குழுவின் வருமானம் மற்றும் செலவினங்களின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| விபரங்கள் | முடிவடைந்த ஆண்டுக்கானது | | முரண் சாதகம்/(பாதகம்) | சதவீதமாக முரண் |
|---|---|---|---|---|
| | 2011 திசெம்பர் 31 இல் | 2010 திசெம்பர் 31 இல் | | |
| **வருமானம்** | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | % |
| தொலைத்தொடர்புகள் தீர்வை | 28,185,372 | 5,704,938 | 22,480,434 | 394 |
| தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணம் | 1,774,458 | 418,436 | 1,356,022 | 324 |
| ஏனைய வருமானம் | 91,803 | 7,187 | 84,616 | 1177 |
| **மொத்த வருமானம்** | **30,051,633** | **6,130,561** | **23,921,072** | **390** |
| **செலவினம்** | | | | |
| ஒழுங்கமைப்புச் செலவினம் | 107,504 | 63,894 | (43,610) | (68) |
| செயற்பாட்டுச் செலவினம் | 593,668 | 688,396 | 94,728 | 14 |
| **மொத்தச் செலவினம்** | 701,172 | 752,290 | 51,118 | **7** |
| **நிதி விளைவுகளிற்கான தேறிய தாக்கம்** | **29,350,461** | **5,378,271** | **23,972,190** | 446 |

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆணைக்குழுவின் தொழிற்படு மூலதனம் 165% இனால் அதிகரித்திருந்தமையால் மீளாய்வாண்டின் முழுவதும் தேவையற்ற திரவச் சொத்துக்களை ஆணைக்குழு வைத்திருந்தமையை அது காட்டியது. மேலும், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரவ விகிதம் 1.4:1 ஆனதுடன் 2010

திசெம்பர் 31 இல் உள்ளவாறு அது 1.2:1 ஆக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 2.3 செயலாற்றல் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வட பிராந்தியத்தில் தொலைத்தொடர்பாடல்கள், ஒலிபரப்பு மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான வசதிகளை வழங்கும் நோக்குடன் கொக்காவில் மற்றும் வவுனியாவில் ரூபா 292.3 மில்லியன் செலவில் இரண்டு கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இருந்தபோதிலும், இந்த மூலதனச் செலவிலிருந்து மீளாய்வாண்டில் எவ்வித வருமானமும் ஆணைக்குழுவால் ஈட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு (திருத்திய) அதிகாரச்சட்டத்திலுள்ள ரீஆர்சீஎஸ்எல் இன் பிரதான பணிகளை அமுலாக்கும் நோக்கில் 2010 ஏப்ரல் தொடக்கம் செயற்படும் வகையில் தொலைந்த மற்றும் களவாடப்பட்ட கையடக்கத் தொலைபெசிகள் தொடர்பான பொதுமக்கள் முறைப்பாடுகளை பொறுப்பேற்று 2010 ஏப்ரலிலிருந்து அதன் மீது புலனாய்வினை மேற்கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், மேற்படி பொதுமக்கள் முறைப்பாடுகளிற்கு பதிலளிப்பதற்காக பொருத்தமான பொறிமறையொன்றை நடைமுறைப்படுத்தவதற்கு ஆணைக்குழு தவறியிருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளில் பொதுமக்கள் முறைப்பாடுகள் மீதான பதிலளிப்புகளின் செயன்முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை | பதிலளிப்புகளின் எண்ணிக்கை | பதிலளிப்பின் சதவீதம் |
|---|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை | % |
| 2010 | 5600 | 1200 | 21.4 |
| 2011 | 5400 | 1900 | 35.2 |

இது தொடர்பில் ரீஆர்சீஎஸ்எல் இன் பணிப்பாளர் நாயகம் பின்வருமாறு எனக்கு அறிவித்திருந்தார்.

‘‘அவ்வாறான நிகழ்வுகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தமையால் இச்சேவையை தொடர்ச்சியாக வழங்குவதற்கு ஆணைக்குழுவிற்கு முடியாதுள்ளது’’

(இ) ஏதேனுமோர் தொலைத்தொடர்பு உபகரணமொன்றை வர்த்தக நோக்கில் உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், இறக்குமதி செய்தல், விற்பனைக்காக முன்னிறுத்துதல், ஒப்படைத்தல், வாடகைக்கு விடுதல், குத்தகைக்கு வழங்குதல்,

செய்து காட்டல், பேணிவருதல் அல்லது திருத்தம் செய்தல் யாரேனுமொருவரால் மேற்கொள்ளப்படின் அதற்காக 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1991 இன் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் படி ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளாது நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் வணிகச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு அனுமதிப்பத்திரமின்றி வணிகக் கருமங்களில் ஈடுபட்டு வருகின்ற நிறுவனங்களைக் கண்டறிந்து கட்டணங்களை அறவிடுவதற்கான வழிமுறைகள் அல்லது தரவுமுறையொன்று ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) ரூபா 180,000 தொகையொன்று கடந்த 06 வருடங்களாக உள்முக அறை மற்றும் தலைமையக் கட்டிடத்தினை புதுப்பித்தல் என்பதாக அவ்வேலைகளைப் பூரணப்படுத்தாது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் கணக்கின் கீழ் தொடர்ச்சியாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

## 2.4 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய 1686/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஒவ்வொரு தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களும் 2011 ஜனவரி 01 தொடக்கம் செயற்படும் விதத்தில் புதிய செஸ் வரியினை செலுத்துதல் வேண்டும். ஆணைக்குழுவிற்கு செஸ் வரியினை செலுத்த வேண்டிய காலஎல்லை குறிப்பிடப்படாதிருந்தமை காரணமாக செயற்படுத்துனர்களினால் அவர்களிற்குரிய செஸ் கட்டணங்கள் வெவ்வேறு காலப்பகுதிகளில் தீர்க்கப்பட்டிருந்தன. அதன் விளைவாக ஆணைக்குழுவிற்கு கிடைக்க வேண்டிய செஸ் வரிகள் குறிப்பிடத்தக்களவு காலதாமதத்துடனேயே கிடைத்திருந்தன. தற்போது காணப்படுகின்ற சட்டங்களில் தாமதக் கொடுப்பனவுகளிற்கான மிகைவிதிப்பிற்கு சட்டரீதியான அதிகாரங்கள் இல்லையென ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் எனக்கு அறவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 22 (ஏ) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு தொலைத்தொடர்பு வழங்குனராலும் அவர்களிற்கு விசேடமாக வருடமொன்றிற்கு விநியோகிக்கப்பட்ட

அனுமதிப்பத்திரத்திற்கான செஸ் கட்டணம் மற்றும் இயக்குனர் அனுமதிப்பத்திரக் கட்டணங்களை எதிர் வரும் ஆண்டின் ஜனவரி 31 இற்கு முன்னர் செலுத்த வேண்டியிருந்த போதிலும் 13 நிறுவனங்களினால் செலுத்த வேண்டிய தமக்குரிய செஸ் கட்டணங்களாகிய ரூபா 206,384,147 கூட்டுத் தொகை மற்றும் 08 நிறுவனங்களினால் செலுத்தவேண்டிய செயற்படுத்துனர் கட்டணங்களாகிய ரூபா 393,808,974 தொகை முறையே 21 தொடக்கம் 275 நாட்கள் மற்றும் 23 தொடக்கம் 275 நாட்கள் வரையிலான கால வீச்சுக்களில் தாமதம் செய்து செலுத்தப்பட்டிருந்தன.

மேற்படி தாமதச் செலுத்துகைகளின் மீது மேலதிகக் கட்டணமொன்றை அறவிட முடியுமென செயற்படுத்துனர்களிற்கு வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு கட்டணமொன்றைத் தீர்மானித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் இயக்குனர் அனுமதிப்பத்திரம் மற்றும் செஸ் கட்டணத்தினை தாமதித்து செலுத்துதல் மற்றும் செலுத்தாதிருத்தல் மீது மேலதிக தண்டப்பணத் தொகையொன்றை அறவீடு செய்வதற்குரிய சட்டரீதியான அதிகாரம் தற்போதுள்ள அதிகாரச்சட்டத்தில் காணப்படாதிருப்பதுடன் அவ்வாறான சட்டரீதியான அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகளை எதிர்வரும் காலத்தில் தொலைத்தொடர்புகள் திருத்திய அதிகாரச்சட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் 2011 ஜுன் 28 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. இருப்பினும், இது தொடர்பில் 2012 யூன் 30 வரை ஆணைக்குழுவினால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 நவம்பர் 10 ஆந் திகதிய 1680/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வெளியிடப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஒவ்வொரு தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களும் சர்வதேச வெளிச்செல்லல் அழைப்புத் தீர்வையினை செலுத்துதல் வேண்டுமாயினும், 08 செயற்படுத்துனர்களால் செலுத்தவேண்டிய ரூபா 29,089,578 தொகை சர்வதேச வெளிச்செல்லல் அழைப்புத் தீர்வை தொகை 18 தொடக்கம் 135 நாட்கள் கால வீச்சில் தாமதத்தின் பின்னர் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் அங்கீகரித்த ஊழியர் கோப்பு 265 ஆக காணப்பட்ட அதேநேரம் உள்ளபடியான ஊழியர் கோப்பு 203 மாத்திரமேயாகும். எவ்வாறாயினும், அங்கீகாரமின்றி ஒப்பந்த மற்றும் அமைய அடிப்படையில் 20 ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில்

சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 11,777,540 அவர்களிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பதவியணியினர் வகை | அங்கீகரித்த ஊழியர் கோப்பு | உள்ளபடியான ஊழியர் கோப்பு | வெற்றிடங்கள் | மேலதிகம் |
|---|---|---|---|---|
| நிறைவேற்று மட்டம் | 23 | 08 | 15 | - |
| பதவிநிலை மட்டம் | 34 | 20 | 14 | - |
| துணைநிலைப் பதவியினர் | 166 | 117 | 49 | - |
| சிற்றூழியர் | 42 | 38 | 4 | - |
| ஏனையோர் (ஒப்பந்த மற்றும் அமைய) | - | 20 | - | 20 |
| | 265 | 203 | 82 | 20 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பும் மேற்கொள்ளப்பட்டது.

நிறைவேற்று மட்டத்தில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் பதிற்கடமையில் ஈடுபட்டமைக்காக மூன்று உத்தியோகத்தர்களிற்கு மீளாய்வாண்டில் ரூபா 208,725 பதிற்கடமைப் படி செலுத்தப்பட்டிருந்தது.

## 2.6 வாகனப் பயன்பாடு

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவிடம் 36 வாகனங்கள் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் வாகனங்களின் எரிபொருளிற்காகவும் பேணுகைக்காகவும் ரூபா 13,464,238 செலவிடப்பட்டது. முன்னைய ஆண்டில் செலவிடப்பட்ட தொகை ரூபா 12,371,085 மாத்திரமேயானதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9% அதிகரிப்பு காணப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 2,950,000 பெறுமதியான 06 வாகனங்கள் 2010 ஆம் ஆண்டிலிருந்து ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் பகிரங்க கேள்விகோரலின் மூலம் இந்த வாகனங்களை கைதவிர்ப்பதற்கு 2012 ஏப்ரல் 02 இல் ஆணைக்குழவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii) 2004 மற்றும் 2010 ஆம் அண்டுகளில் ரூபா 1,850,000 பெறுமதியான இரண்டு வாகனங்கள் விபத்துக்குள்ளாகியிருந்த போதிலும் இது தொடர்பில் நி.பி. 103 மற்றும் 105 இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், ஆணைக்குழுவின் வாகனமொன்று கடந்த பல வருடங்களாக

பயன்படுத்தப்படாதிருந்ததுடன் இந்த வாகனங்களை திருத்தம் செய்யாது துருப்பிடிக்கும் நிலையில் வைத்திருக்கப்பட்டன.

## 2.7 சர்ச்சைக்குரிய விடயம்

------------------------------------

நீர்கொழும்பு, கதிரானையிலுள்ள அண்ணளவாக ரூபா 45,000,000 பெறுமதியான மொத்தக் காணியில் ஏறத்தாழ 50% ஆன காணி அதிகாரமற்ற தரப்பினர் ஆக்கிரமித்திருந்த போதிலும் இது தொடர்பில் ஆணைக்குழு எவ்வித நடவடிக்கையினையும் மேற்கொண்டிருக்கவில்லை. ஆகவே கணக்குகளில் காட்டப்பட்டள்ள ரூபா 136,475,809 தொகையான காணியின் கிரயத்தின் செம்மைத் தன்மை ஒவ்வொரு காணியின் விடயத்திலும் சரிவர வெளிப்படுத்தபட்டுள்ளதனை கருத்திற்கொள்ள முடியவில்லை.

## 3. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்ல ஆளுகை

-------------------------------------------------------------------

## 3.1 கூட்டிணைந்த திட்டம்

-----------------------------------

(அ) அரசாங்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2007 திசெம்பர் 18 ஆந் திகதிய பீ.ஈ.டீ/47 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் அரசாங்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் நல்ல ஆளுகைக்கான வழிகாட்டல்கள் கையேட்டின் 05 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நாளதுரையாக்கப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டமொன்றின் பிரதி வருடம் தொடங்கி 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சு (சனாதிபதி செயலகம்), அரசாங்க பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி என்போரிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழு அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. தற்போது ஆணைக்குழு வசமுள்ள நாளதுவரையாக்கப்படாத கூட்டுத்திட்டத்திற்கமைய, முகாமைத்துவத்தின் பொறுப்புக்களை தெளிவாக இனங்காணத்தக்க வகையில் ஆணைக்குழுவின் முக்கிய பிரிவுகளான மனித வளங்கள், நிர்வாகம், நிதி, கிடைக்கக் கூடியதாகவுள்ள வளங்கல் போன்றவற்றை இனங்கண்டு கூட்டுத் திட்டமொன்றைத் தயாரிப்பதன் பால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் எதிர்வரும் மூன்று ஆண்டுகளிற்கான செயற்பாட்டு விளைவுகளின் மீளாய்வும் கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆணைக்குழுவின் தூரநோக்கு, இலட்சிய நோக்கு மற்றும் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கான

தந்துரோபாய வழிமுறைகளையும் மேற்படி கூட்டிணைந்த திட்டம் கொண்டிருக்கவில்லை.

கூட்டிணைந்த திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான ஒப்பந்தம் வெளிநாட்டு நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மூன்று தவணைகளில் 2000 திசெம்பர் 06, 2000 திசெம்பர் 26 மற்றும் 2001 ஏப்ரல் 19 ஆந் திகதிகளில் முறையே ரூபா 22.2 மில்லியன் அல்லது ஐ.அ.டொலர் 262,980 செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தக்காரரினால் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்திருந்த ஆவணங்கள் சிறந்த தரத்தில் இல்லாமையும் வேறோர் நிறுவனத்திற்காக தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்று சில மாற்றங்களை மேற்கொண்ட பின்னர் இ.தொ.ஆணைக்குழுவிற்கு திணிக்கப்பட்டிருந்தமையும் 2007 யூன் 19 மற்றும் 2011 நவம்பர் 15 ஆந் திகதி இடம்பெற்ற பொதுக் கணக்குகள் குழுக் கூட்டத்தில் அவதானிப்புச் செய்யப்பட்டது. இருப்பினும், 2012 யூன் 30 வரை ஆணைக்குழுவினால் இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2011 நவம்பர் 15 ஆந் திகதி இடம்பெற்ற பொதுமுயற்சிகள் பாராளுமன்றக் குழுவினால் இது தொடர்பில் பெருமளவு விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டதுடன் மேற்படி விடயம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழுவிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

## 3.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

-----------------------------------------------

அடைய எதிர்பார்த்த இலக்குகளுடன் பதவியணியினரின் பொறுப்புக்களையும் காலப்பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகளிற்கான பாதீட்டு ஒதுக்கீடுகளையும் தெளிவாக இனங்காட்டக்கூடியதாக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று மீளாய்வாண்டிற்காக ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன்காரணமாக திருத்த நடவடிக்கைகள் மற்றும் தேவையான மாற்றங்களை மேற்கொண்டு எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு பொருத்தமான மதிப்பிடலை மேற்கொள்ள முடியாதிருந்தது.

### 3.3 உள்ளகக் கணக்காய்வு

பிரதான உள்ளகக் கணக்காய்வாளரை உள்ளடக்கி 03 ஊழியர்களை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு கொண்டுள்ளது. மீளாய்வாண்டிற்கான அரையாண்டு கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்க சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 3.4 கொள்வனவுகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

### 3.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பாதிடப்பட்ட தொகைகளிற்கும் உள்ளபடியான தொகைகளிற்கும் இடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட இருபத்தி நான்கு விடயங்கள் மீளாய்வாண்டுக்காக தயாரிக்கப்பட்ட பாதிடப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறான உண்மையான காசு மீதியினை எடுக்காது முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறு பாதிடப்பட்ட நிதிக்கூற்றில் காணப்பட்ட காசு மீதியினை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிற்கான காசுப் பாதீடு தயாரிக்கப்பட்டிருந்தமையால் ஆண்டுமுழுவதும் உள்ளபடியான காசு மீதிக்கும் பாதிடப்பட்ட காசு மீதிக்குமிடையே குறைந்தது ரூபா 1,000,000,000 வேறுபாடு காணப்பட்டது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) மிகையான நிதிகளை முதலீடு செய்தல்

(ஆ) கடன்பட்டோர்

(இ) தொலைத்தொடர்புத் தீர்வைகள் மற்றும் கட்டணங்களை அறவிடுதல்

(ஈ) வாகனப் பாவனை

(உ) காணமல்போன அல்லது களவாடப்பட்ட கையடக்கத் தொலைபேசிகள் மீதான புலனாய்வு